| | ரோயல் கல்லூரி –கொழும்பு 07<br>Royal College – Colombo 07 | |
|---|---|---|
| | மூன்றாம் தவணைப் பரீட்சை-2022(2023)<br>**Third Term Examination-2022(2023)** | 48 \| T \| I,II |
| | தமிழ் இலக்கிய நயம் தரம் 10<br>Tamil Literature Grade 10 | நேரம் 3 மணித்தியாலங்கள்<br>Time 3 Hours |

- **பகுதி I இல் இருந்து 1,2 ஆகிய இரு வினாக்களுக்கும் பகுதி II இல் 3ம் வினாவுக்கும் பகுதி IIஐ இல் 4,5,6,7 ஆகிய வினாக்களில் எவையேனும் இரண்டு வினாக்களுமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி I

1) **(i) தொடக்கம் (v) வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

I. ''மொய்ம்பினோய்! சொன்ன எல்லையின் ஊங்கினும் தூங்கினன் ; மன்னன் வந்திலன்.''
(அ) இக்கூற்று யாரால், யாருக்கு கூறப்பட்டது?
(ஆ) இங்கு '' மன்னன்'' எனக் குறிப்பிடப்படுபவன் யாவன்?

II. ''இது பாதிவழி வந்து தாமரைக் கைதந்த பச்சை அமுதமையா''
(அ) இப் பாடலை இயற்றியவர் யார்?
(ஆ) இவ்வடியில் காணப்படும் அணியைக் குறிப்பிட்டு விளக்குக.

III. ''அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர் அடிக்கு நெருஞ்சிப்பழம்''.
(அ) இக்குறளில் மென்மையான பொருட்களாக கூறப்படுபவை எவை?
(ஆ) திருக்குறள் தோன்றிய காலப்பகுதி எது?

IV. '' இன்றைக்கு இரவைக்கு பாருங்க முசுப்பாத்தியை''
(அ) இக்கூற்று இடம்பெறும் சிறுகதை யாது?
(ஆ) இங்கு முசுப்பாத்தியாக இடம்பெறப்போகும் விடயத்தை குறிப்பிடுக.

V. '' பாலைப்பண் வழிப்பறிக் கொள்ளைக்காரர்களின் கொடிய மனத்தையும் மாற்றி ஆயுதங்களைக் கீழே போட்டுவிடச் செய்யும்''.
(அ) இக்கருத்து இடம்பெற்ற இலக்கியம் எது?
(ஆ) பாடிய ஆசிரியர் யார்?

(4X5= 20 புள்ளிகள்)

2) கீழ்காணும் உரைப்பகுதியை வாசித்து அல்லது செய்யுட்பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடைஎழுதுக.

உரிமையும் கடமையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. உரிமையை மட்டும் மிகுதியாக விரும்பிக் கடமையைப் புறக்கணித்தால், குழப்பம்தான் மிஞ்சும்; உள்ள உரிமையும் நிலைக்காது. இன்று உலகத்தில் பல பகுதிகளில் உள்ள சீர்கேடுகளுக்கும், குழப்பங்களுக்கும் இந்தத் தவறுதான் காரணம். பலர் இன்று உரிமையைப் பற்றியே போராடுகின்றார்கள். கடமையில் கருத்துச் செலுத்துவது குறைகின்றது. அலுவலகம் , தொழிற்சாலை முதலியவை மட்டும் அல்ல; குடும்பமும் அப்படிதான். எந்தக் குடும்பத்தில் கணவனும் மனைவியும் உரிமையைப்பற்றி மிகுதியாக நினைத்து, கடமையைப் புறக்கணிக்கின்றார்களோ, அந்தக் குடும்பத்தில் போராட்டம் ஏற்படும் ; உரிமைப் போராட்டம் வளர்ந்தால் கணவன் மனைவி பூசல் வளரும்; மக்கள் ஒழுங்காக நடக்க மாட்டார்கள் ; காதல், கற்பு முதலியவற்றிற்கு இடம் இருக்காது.

ஆகவே ; எல்லோரும் ஒத்த அன்பு செலுத்தி தன்னலத்தை குறைக்க வேண்டும் ; அல்லது உரிமைப்பற்றி எண்ணும் அளவுக்குக் கடமை பற்றியும் உணர்வதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும். இல்லையானால்,குடும்பப் போராட்டம் , நாட்டுக்கலகம் , உலகப்போர் முதலியவற்றைத் தவிர்க்க முடியாது.

I. இந்த உரைநடைப்பகுதி வலியுறுத்தும் பிரதான விடயம் யாது?
II. உலகின் பல பகுதிகளிலும் நிலவும் சீர்கேடுகளுக்கும் குழப்பங்களுக்கும் காரணம் யாது?
III. உலகில் அமைதி நிலவுவதற்கு செய்ய வேண்டியது யாது?
IV. ஆசிரியர் தன் கருத்தை வலியுறுத்துவதற்குக் கையாண்ட உத்திகள் பற்றி விவரிக்குக.

( 4X5=20 புள்ளிகள்)

**அல்லது**

- **கீழே தரப்பட்டுள்ள பாடற் பகுதியை வாசித்து தரப்பெற்ற வினாக்களுக்கு விடை எழுதுக.**

தனித்தமைந்த வீட்டில் புத்தகமும் நானும்
சையோகம் புரிந்ததொரு வேளை தன்னில்,
இனித்தபுவி இயற்கையெழில் எல்லாம் கண்டேன் ;
இசை கேட்டேன்! மணம்மோந்தேன்! சுவைகள் உண்டேன்!

மனிதரிலே மிக்குயர்ந்த கவிஞர் நெஞ்சின்
மகாசோதியிற் கலந்த தெனது நெஞ்சம்
சனித்தங்கே புத்துணர்வு! புத்தகங்கள்
தருமுதவி பெரிது! மிகப்பெரிது கண்டீர்!

மனிதரெல்லாம் அன்புநெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து
தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வதற்கும்
இனிதினிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச்சாலை;
புனிதமுற்று மக்கள் புது வாழ்வு வேண்டில்
புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்

I. கவிஞரின் மனமொன்றிய புத்தக வாசிப்பை வெளிப்படுத்தி நிற்கும் தொடர் யாது?
II. புத்தக வாசிப்பில் கவிஞர்பெற்ற அனுபவம் எவ்வாறு விவரிக்கப்படுகிறது?
III. இங்கு கையாளப்பட்டுள்ள அணிகளை விளக்குக.
IV. இக் கவிதையில் புத்தகசாலையின் அவசியம் பற்றி கூறப்படுபவை எவை?

(4X5= 20 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන

# பகுதி II

3) கீழே தரப்பட்டுள்ள கவிதைப் பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வழிகாட்டற்குறிப்புகளின் அடிப்படையில் கவிதையை நயந்து குறைந்தபட்டம் 200 சொற்களில் எழுதுக.

காலையிலே பனிகாயு முன்னே குளிர்
காற்றைக் கிழித்துமே ஓடுகின்றோம்! தொழிற்
சாலையிலே சங்கு ஊது முன்னே பசுந்
தங்கத் தளிரினை கிள்ளிடுவோம்!

வெண்டை விரல்கள் விறைந்திடினும் எங்கள்
மேனி குளிரில் நடுங்கிடினும், - இரு
கெண்டை விழிகள் பளபளக்கும் , தளிர்
கிள்ளவோ கைகள் பரபரக்கும் !

கூடை அசைந்து பக்கத்திலும் வந்து
கூட்டும் 'கிறுக்கிறுக்' கோசையிலே – நெஞ்ச
மேடையிலே சதி ராடு மெண்ணங்களின்
வேதனை துன்ப ஒலி கேட்கும்!

பக்க திரைச்செடி சிக்கிடும் போதிலும்
பக்குவ மாகவிலக்கிச் செல்வோம் - எம்மைச்
சிக்கவைத் திருக்கும் அடிமைத் தளையினை
தூக்கி யெறியத் துணிவு கொள்வோம்.

வெட்டிய செடியில் புடைத்தெழும் அரும்பென
மேலுறும் எண்ணம் எங்கள் மனதில் , - இனி
முட்டித் ததும்பி முளைத்து விடும் எம்மை
மூடிய பேரிருள் ஒட்டுவோம்.

என்றும் அடிமைச் சிறையினி லேவைத்த
எத்தர்கள் கொட்டமடக்கிடவே பெருங்
குன்று நிகர்த்த மனவுறுதி கொண்டு
கோதையர் போரிட முன்வருவோம்.

பெண்ணுக்கு கல்வி பெருந்தீது , உரிமை
பேசிட லோஅது பெருந்தவறு, என்ற
எண்ணம் படைத்தவர் மண்ணிற் புதைத்திட
எண்ணற்கரிய கலை படைப்போம்.

சாதிச் சமய சங்கறுத்து, பெண்கள்
தாழ்வுயெனனும் தீயே போக்கொழித்து : இம்
மேதினி யில்புது மாற்றம் படைத்து பெண்
விடுதலைக் கீதம் அசைத்திடுவோம் !

(அ) இக் கவிதை எழுந்த பிண்னணி
(ஆ) தோட்டத் தொழிலாளிப் பெண்கள் அனுபவித்த அடக்குமுறைகள்
(இ) அவர்களின் விடுதலை வேட்கை
(ஈ) இங்கு கையாளப்பட்டுள்ள உவமை,உருவங்கள்.
(உ) பெண் உரிமைச் சிந்தனைகள்.

(5X6= 30 புள்ளிகள்)

## பகுதி III

- **4,5,6,7 ஆகிய வினாக்களில் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.**

4) கிட்கி இந்தைப் படலத்தில் பின்வருவனவற்றை கம்பர் சித்தரிக்கும் வகையினை விவரிக்குக.

I. இராமன் இலக்குமணனிடம் சுக்கிரீவன் குறித்து ஆவேசம் (கோபம்) கொண்டமை.

II. தாரையின் மதிநுட்பம்

(15 புள்ளிகள்)

5) திருக்குறள் நலம் புனைந்து உரைத்தல் அதிகாரத்தில் தலைவியின் அரசினை விளக்குக.

I. முக அழகு

II. ஏனைய உறுப்புக்களின் சிறப்பு

(15 புள்ளிகள்)

6) எலியம் எனும் சிறுகதையில்

I. எலிகளை விரட்டியக்க கதாபாத்திரம் எடுத்த முயற்சிகளை அங்கத சுவைபட விளக்குக.

II. இக்கதையில் சித்தரிக்கப்படும் கதாநாயகனின் மனநிலையை விளக்குக

(15 புள்ளிகள்)

7) விவேக சிந்தாமணி எனும் கவிதையானை அடிப்படையாகச் கொண்டு

I. பெண்ணின் கண் அழகினை கவிஞர் விளக்குகின்ற நயத்தினை விளக்குக.

II. தேன் நுகர் வண்டு மதுதனை உண்டு …………
என்ற பாடலின் கவிஞனின் கற்பனையாற்றலை எடுத்துகாட்டுகளுடன் ( உதாரணத்துடன் ) விளக்குக.

(15 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

**Whatsapp**
**075 287 1457**